மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. விழா எடுக்க வேண்டுமென்றால், இவ்வளவு தான் செலவு செய்யவேண்டுமென்ற விதிமுறைகள் இருப்பதால் அதற்கு மேற்பட்ட செலவுகளை தனிப்பட்டவர்கள் செய்ய முன் வருவார்களானால் ஆங்காங்குள்ள ஊராட்சி மன்றங்கள் ஒப்புதல் வழங்கும். இதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்து சுட்டிக்காட்டினால் அறிவுரைகள் வழங்கலாம்.

கூனிமேடு பஞ்சாயத்து முன்னாள் தலைவர்.

*545 வினா—**திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த கூனிமேடு பஞ்சாயத்து முன்னாள் தலைவர் மீது சென்னை பஞ்சாயத்து சட்டம் 173 (1)-ன் படி நடவடிக்கை எடுக்கக் கோரி 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியிட்ட பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியின் ரிப்போர்ட்டு ஒன்று அரசாங்கத்தின் பார்வைக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) மரக்காணம் ஊராட்சியின் முன்னாள் தலைவராகிய திரு கே. எம். பட்டுராசா என்பவர் மீது தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் 173 (1)-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மரக்காணம் ஊராட்சி நலப்பரப்பு அதிகாரி 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியன்று கூனிமேடு ஊராட்சித் தலைவருக்குக் குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளார்.

(இ) இது பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் : பணம் கையாடிவிட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டு 1967, 1968, 1969 என்று இவ்வளவு காலம் வரையில் பரிசீலித்துக்கொண்டே இருக்கிறதே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை. இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பணம் கையாடல் செய்யப் பட்டதைக் கண்டுபிடிக்க உடனேயே அதை வசூலிக்க அதிகாரங்கள் இல்லை. அதற்கான நோட்டீஸ்கள் கொடுக்கவேண்டும், வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அங்கே இருக்கக்கூடிய அரசாங்க வழக்கறிஞரிடத்தில் ஆலோசனை கேட்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டளைகளைப் பெற வேண்டும். இப்படிப்பட்ட சட்டச் சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. என்றாலும், நிதியை வசூலிக்கத் தேவையான நடவடிக்கைகளை முறையாக எடுத்து வருகிறார்கள். விரைவாகத் தொகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் : பணமும் போகக்கூடாது, நடவடிக்கையும் எடுக்கவேண்டும், ஒரு சமயம் அவர், ''பணத்தைக் கட்டி விடுகிறேன், விட்டு விடுங்கள்'' என்று கூறினால் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பணத்தைக் கட்டிவிட்டாலும் கிரிமினல் குற்றமாக இருந்தால் அதற்கான வழக்குகள் தொடரப்படும். அதற்குத் தேவையான வாய்ப்புகள் இல்லாவிட்டால் சிவில் கோர்ட்டில் வழக்குப் போட்டு பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்

கொள்ளப்படும். பணத்தைக் கட்டிவிட்டால் குற்றம் செய்தவரை விட்டு விடுவது என்ற நிலை கிடையாது. அதற்கான வழக்குகள் தொடரப்படும்.

வல்லம்படுகை—குமராட்சி சாலை

*550 வினா.—திரு எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சிதம்பரம் தாலூகா வல்லம்படுகையிலிருந்து வடக்குமாங்குடி, தெற்குமாங்குடி, அத்திப்பட்டு நந்திமங்கலம், கீழக்கரை முதலிய கிராமங்கள் வழியாக குமராட்சிக்கு ரோடு போடும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது :

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தெற்கு மாங்குடிக்கும் அத்திப்பட்டுக்குமிடையேயும், நந்திமங்கலத்துக்கும் கீழக்கரைக்குமிடையேயுந்தான் சாலை வசதிகள் தற்சமயமில்லை. இவ்விரு சாலைகளையும் கிராமப் பணித் திட்டத்தின் கீழ் குமராட்சி பஞ்சாயத்து ஒன்றியமே அமைத்துக்கொள்ள முடியும். நந்திமங்கலம்—கீழக்கரை சாலைக்கு வேண்டிய நிலம் இலவசமாகக் கிடைக்காவிடில், இந்த இணைப்புச் சாலைக்கான செலவு 40,000 ரூபாய்க்கு மேலாகலாம். அந்த நிலையில் இந்த வேலை "ஏனைய சாலைகளின்" கீழ் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தால், இந்த இணைப்புச் சாலையை அமைக்க இன்னும் சில ஆண்டுகளாகும்.

திரு எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலூக்கா குமராட்சி யூனியனுககுக் கிழக்கேதான் எல்லா பஞ்சாயத்துக்களும் அடங்கியிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் அந்தக் பகுதி கிராம மக்கள் குமராட்சிக்குத் தான் வர வேண்டியிருக்கிறது. சுற்றிப் போனால் 15 மைல் ஆகிறது. குறுக்கே போனால் ஆறு அல்லது ஏழு மைல்தான் ஆகும். ஆகவே, இந்தக் குறுக்கு ரோடை வல்லம்படுகை, வடக்கு மாங்குடி, தெற்கு மாங்குடி, புல்லம்பாடு வழியாக போட்டுக் கொடுத்தால் பொதுமக்களுக்கு சவுகரியமாக இருக்கும். இதை உடனடியாக அரசாங்கம் நிறைவேற்றித் தருமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தொகையை அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்போது புதிய பணிகளாகத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலையை ஆங்காங்கு இருக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பரிந்துரை செய்து அனுப்புகின்றன. மூன்றுவது திட்டத்திற்காக மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே தேர்ந்தெடுத்த 212 வேலைகளில் இன்னும் 184 பணிகள் அனுமதி வழங்கப்படாத நிலை இருக்கிறது. இந்தப் பணியை அந்த முறை வரிசைப்படி எடுத்துக் கொள்ள வேண்டிய சங்கடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு உரிய அடுத்த கேள்விக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிறுவனக் கூட்டம்

*551 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

27—5—1968 தேதி ஊட்டியில் நடந்த தொழிலாளர் நல அரசாங்க இன்சூரன்ஸ் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?